People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 22.11.2009 முதல் 30.11.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 88. | 22.11.09 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடி அடுத்த சேவூரைச் சேர்ந்த திருநாவுக்கரசு மகள் ஆதிலட்சமி(17), மேல்பாடியைச் சேர்ந்த ஜெய்சங்கர்(25) என்பவருடன் ஆதிலட்சுமிக்கு பழக்கம் ஏற்பட்டது. இருவரும் வீட்டை விட்டு வெளியேறி பல இடங்களில் சுற்றி விட்டு வள்ளிமலையில் ரூம் போட்டு தங்கினார். ஜெய்சங்கர் மற்றும் அவரது நண்பர்கள் மாரிமுத்து(24), அசோகன் (25), ஆகியோர் ஆதிலெட்சுமியை கற்பழித்தனர். பின் மூவரும் தலைமறைவாகினர், ஆதிலெட்சுமி வேலூர் மகளிர் போலீஸில் புகார். ஜெய்சங்கர் உட்பட முன்று பேரையும் போலீஸார் கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 89. | 22.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை தெற்கு வாசல் மகளிர் காவல்நிலைய இன்ஸ்பெக்டர் நிர்மலா, இவரிடம் மதுரை பொன்னகரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் வரதட்சிணை தொடர்பாகப் புகார் அளித்தாராம். நிர்மலா இது பற்றி வழக்கு பதியாமல் காலம் கடத்தியதால் அப்பெண் போலீஸ் கமிஷனர் க.நந்தபாலனிடம் புகார் அளித்தார். இதையடுத்து விசாரணை நடத்திய ஆணையர் இன்ஸ்பெக்டர் நிர்மலாவை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார்.<br>இதே போன்று கரிமேடு போக்குவரத்து பிரிவு தலைமைக் காவலர் ராமன் என்பவர் குடும்பப் பிரச்சனையில் ஒருவரை மிரட்டியதாக ஆணையருக்குப் புகார் வந்தது. இதையடுத்து விசாரணையின் பேரில் தலைமைக்காவலர் ராமனை சஸ்பெண்ட் செய்து ஆணையர் உத்தரவிட்டுள்ளதாக மாநகர் நுண்ணறிவுப் பிரிவு போலீஸார் தெரிவித்தனர். | காவலர்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 90. | 22.11.09 | **மதுரை மாவட்டம்:** கோ.புதூர் டி.ஆர்.ஓ.காலனியைச் சேர்ந்தவர் முருகேசன்(38), இவரது தங்கை நாகலட்சுமி(23), இவரும் டி.கல்லூரப்பட்டியைச் சேர்ந்த முருகன், இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர். காதல் திருமணம் என்பதால் முருகனுடைய தந்தை பழனிச்சாமி, தாய் மாரியம்மாள் ஆகியோர் வரதட்சணைக் கேட்டு நாகலெட்சுமியை கொடுமைப்படுத்தி வந்தனர். அடிக்கடி கோவித்துக் கொண்டு அண்ணன் வீட்டுக்கு | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வந்தார் அண்ணன் சமாதானப்படுத்தி அனுப்பிவைத்தார். திடீரென நேற்று நாகலெட்சுமி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக அண்ணன் முருகேசனுக்குத் தகவல் வந்தது. சாவில் மர்மம் இருப்பதாகவும் கணவர் முருகன், மாமியார், மாமனார், அடித்துக் கொலை செய்ததாகவும் முருகேசன் புகார் செய்தார். போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். | | |
| 91. | 22.11.09 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் காவேரி பாக்கத்தைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன் இவரது மனைவி கஸ்தூரி, இவர்களது மகள் பவானி(3) அங்குள்ள நர்சரி பள்ளியில் படித்து வந்தாள். நேற்று விளையாட சென்ற குழந்தை பல இடங்களில் தேடியும் வீடு திரும்பவில்லை இது குறித்து போலீசில் ராமசந்திரன் புகார் செய்தார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 92. | 22.11.09 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி கணேசபுரத்தைச் சேர்ந்தவர் பாண்டிச் செல்வி. தனியார் ஆஸ்பத்திரி மெடிக்கலில் பணியாற்றி வந்தார். அதே கடையில் கல்லல் பகுதியைச் சேர்ந்த வெங்கடேசன் என்பவர் பணிபுரிந்தார். இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டது. திருமணம் செய்வதாக கூறி அடிக்கடி உல்லாசமாக இருந்தனர். வெங்கடேசுக்கு வேறுபெண்ணுடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. ஆத்திரமடைந்த பாண்டிச்செல்வி காரைக்குடி போலீஸில் புகார். இது குறித்து போலீஸார் வெங்கடேசை கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 93. | 22.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன் சத்திரம்–பழனி சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் அருகே உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாளராக உள்ளவர் லிங்கேஸ்வரர், இவ் அலுவலகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தகவல் வந்தது. அங்கு திடீர் சோதனை நடத்திய லஞ்ச ஒழிப்பு துறை போலீசார். பதியப்படாமல் இருந்த ஆயிரக்கணக்கான பத்திரங்கள் அதற்குரிய பணம் ரூ.11 ஆயிரத்திற்கும் அதிகமான ரொக்கபணம் பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்தனர். | லஞ்சம்’ | தமிழ்சுடர் |
| 94. | 22.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் பாம்பார்புரத்தில் தனியார் பள்ளி ஒன்று உள்ளது. பள்ளி வளாகத்தில் மருத்துவமனை ஒன்று உள்ளது. அங்கு பாரதி(28) பணியாற்றி | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வந்தார். இவரது கணவர் சத்தியன் (32), கணவன், மனையிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர். மன உளைச்சல் காரணமாக பாரதி அவர் பணியாற்றிய பள்ளி வளாகத்தில் ஒரு மரத்தில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டர். இது குறித்து பள்ளி முதல்வர் கொடுத்த புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் ஜேம்ஸ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். | | |
| 95. | 22.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நத்தம் அருகே பொய்யாம்பட்டி பகுதிகளில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் மீது கொடூரமான தாக்குதலை கட்டவிழ்த்த வனதுறை அதிகாரி அழகுமலை தலைமையில் 15 பேர் பட்டணம்பட்டி, பொய்யாம்பட்டி மக்கள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தியுள்ளனர். ஒரு வயதான பெண்மணியை பூட்ஸ்காலால் மிதித்த காயப்படுத்தியதில் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். இவருக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தது யார். வனத்துறை அதிகாரி அழகுமலை மற்றும் 15 பேரை கைது செய்யவேண்டும் பணி இடை நீக்கம் செய்யவேண்டும். என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கே.பாலபாரதி எம்.எல்.ஏ பேசினார். | காவல்துறை ------வன்முறை | தீக்கதிர் |
| 96. | 23.11.09 | **தேனி மாவட்டம்:** பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்தவர் ஒரு கல்லூரி மாணவி அங்குள்ள கல்லூரியில் இராண்டாம் ஆண்டு படித்து வருகிறார். சம்பவத்தன்று கல்லூரிக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை, பல இடங்களில் தேடியும் காணவில்லை. விசாரித்ததில் அதே கல்லூரியில் படிக்கும் 3ம் ஆண்டு மாணவன் சிவா கடத்திச் சென்றுள்ளது தெரியவந்தது. இது குறித்து தேனி மகளிர் காவல்நிலையத்தில் புகார் செய்தனர். வழக்குப்பதிவு செய்த போலீசார். செங்குளத்துப்பட்டியைச் சேர்ந்த சிவாவை தேடி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 97. | 23.11.09 | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையம் பகுதியில் பெரியாறு ஓடைகளில் மணல் கடத்தியதாக 5 டிராக்டர்களை வட்டாட்சியர் மனோகரன் பறிமுதல் செய்தார். கோம்பையில் ஓடைகளில் மணல் கடத்திய திரவியம், முத்துராஜ் ஆகியோரின் 2 டிராக்டர்கள், சீப்பலாக்கோட்டை பகுதியில் 1 டிராக்டரையும், | மணல் கடத்தல் | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலும் ஆற்றப்பகுதியில் மணல் கடத்திய 2 டிராக்டரையும் மொத்தம் 5 டிராக்டர் பறிமுதல் செய்யப்பட்டது. | | |
| 98. | 23.11.09 | **மதுரை மாவட்டம்:** அய்யர் பங்களாவைச் சேர்ந்த அருண்விஜய்(30), இவரது மனைவி சுபேதா(21), கூடுதல் வரதட்சனைக் கேட்டு கொடுமைபடுத்தியதாக கணவர் அருண்விஜய், அவரது உறவினர்கள் சரசு, செல்வராணி, லலிதா, சுகிதா ஆகிய 5பேர் மீது திருப்பரங்குன்றம் போலீஸில் புகார். இது குறித்து போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 99. | 23.11.09 | **மதுரை மாவட்டம்:** நடுமுதலைக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் சித்ரா(22), இவரது கணவர் தங்கப்பாண்டி(27), கூடுதல் வரதட்சனைக் கேட்டு சித்ரவதை செய்ததாக சித்ரா கொடுத்த புகாரின் பேரில் தங்கப்பாண்டி, இவரது உறவினர்கள் ரத்தினம், பஞ்சவர்ணம், மீது சமயநல்லூர் காவல்நிலையத்தில வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 100. | 23.11.09 | **தர்மாபுரி மாவட்டம்:** தேன்கனிக்கோட்டை உளிமங்கலத்தைச் சேர்ந்தவர் முனிராஜ், விவசாயி, இவரது மனைவி பிரபாவதி தனியார் நிறுவன ஊழியர் இவர்களுக்கு ஜெகதீஷ்(4), விஷால்(2) இரு மகன்கள் உள்ளனர். முனிராஜுக்கும், அவரது தந்தை முனியப்பாவுக்கும் நிலம் பங்கீடு தொடர்பான தகராறு இருந்து வந்தது. மீண்டும் தகராறு ஏற்பட்டது. மகனை வீட்டை விட்டு வெளியேறும்படி முனியப்பா கூறினார். மனமுடைந்த முனிராஜ் தனது குழந்தைகளுக்கு விஷம் கொடுத்துவிட்டு தானும் விஷம் குடித்தார். இறந்து போன குழந்தைகள் உடல்களை குழி தோண்டி புதைத்தார். அதை பார்த்த பொதுமக்கள் தேன்கனிக்கோட்டை போலிஸில் புகார் சொதனர். போலீசார் முனிராஜை கைது செய்தனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 101. | 23.11.09 | **கடலூர் மாவட்டம்:** பச்சையாங்குப்பம் நடுத்தெருவைச் சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் மகள் இந்துமதி(19), கடந்த 14 தேதி தோட்டத்திற்கு சென்றவர் மர்ம நபர்களால் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக போலீஸார் விசாரணையில் அந்தோணி இருதயராஜ் என்பவர் இந்துமதியை காதலித்ததாகவும் அவர் நான்தான் தோட்டத்திற்கு வரவழைத்து கற்பழித்து கொலை செய்தேன் என வாக்குமூலம் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுத்தார். இது குறித்து கடலூர் போலீசார் அந்தோணி இருதயராஜை கைது செய்தனர். | | |
| 102. | 23.11.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** உலக மீனவர் தினம் நேற்ற முன் தினம் கொண்டாடப்பட்டது. மத்திய அரசு அறிவித்த கடல் மேலாண்மை கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் 200–க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் நேற்று முன்தினம் காலை கோட்டைப்பட்டினம் பகுதியில் இருந்த மீன் பிடிக்க சென்றனர். சல்மான் பாரிஸ் என்பவருக்கு சொந்தமான படகில் ஹக்கீம், ரஹமத் அலி, சீனிமுகமது, ஆகிய முவரையும் இலங்கை கடற்படையினர் தாக்கினர். அவர்களை நிர்வாணப்படுத்தி ஐஸ்கட்டிகளில் படுக்கவைத்து மூன்று மணி நேரம் சித்ரவதை செய்த அவர்கள் பிடித்த மீன்களையும் பறித்துக் கொண்டு விரட்டி விட்டனர். மீனவர் தினத்தில் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து மத்திய, மாநில அரசு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கேட்டுக்கொண்டனர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 103. | 24.11.09 | **மதுரை மாவட்டம்:** திருச்சி எடமலைப்பட்டியைச் சேர்ந்தவர் இந்திராகாந்தி(45), இவரது கணவர் சந்திரன்(52), இவர் மும்பையில் இன்ஜினியராக வேலை செய்து வருகிறார். கணவன் மனைவி இருவருக்குமிடையே ஏற்பட்ட தகராறில் பிரிந்து வாழ்கின்றான். சந்திரன் கல்யாணி என்ற பெண்ணை 2வது திருமணம் செய்து திருநகரில் குடும்பம் நடத்தினார். இந்திராகாந்தி திருச்சி சென்று தனியே வசித்து வந்தார். அங்க சந்திரன், இரண்டாவது மனைவி கல்யாணி, உறவினர் பாலாஜி, சுதா, ராஜா ஆகிய 5 பேரும் கொடுமைப்படுத்தினார். இது குறித்து சமயநல்லூர் போலீசாரிடம் இந்திராகாந்தி புகார். இதன் பேரில் போலீசார் 5பேர் மீதும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 104. | 24.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** மம்சாபுரம் ராஜாமணி நாடார் தெருவைச் சேர்ந்தவர் சௌந்தரராஜன்(38), இவரது மனைவி லதா(36), கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் சௌந்தரராஜன் விறகுகட்டையால் அடித்து மனைவியின் மண்டையை பிளந்தார். படுகாயமடைந்த லதா ஸ்ரீவில்லிபுத்தூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து மம்சாபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 105. | 24.11.09 | **திருச்சுழி---- மாவட்டம்:** நரிக்குடி அருகே கட்டாளம்குளத்தைச் சேர்ந்தவர் சண்முகபாண்டி இவரது மகள் ராஜம்(28), இவருக்கும் தஞ்சாவூர் அம்மாபேட்டையில் கிளினிக் வைத்திருக்கும் டாக்டர் மகேந்திரன் (37) நவ–8ல் திருமணம் நடந்தது. இந்நிலையில் கூடுதல் வரதட்சனைக் கேட்டு மிரட்டியதாக சண்முகபாண்டி ஏ.முக்குளம் போலீசில் புகார். இன்ஸ்பெக்டர் கருணாநிதி விசாரணை செய்தபோது, மகேந்திரன் போலி டாக்டர் என்று தெரிய வந்தது. அவரையும் அவருக்கு உடந்தையாக இருந்த புரோக்கர் கருப்பையாவையும் கைது செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 106. | 25.11.09 | **மதுரை மாவட்டம்:** ஹார்விநகரை சோந்தவர் முருகன் அவரது மனைவி தேவி(25), 2003 செப்டம்பர்14 இவருக்கு அரசு மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. குழ்நதைக்கு முச்சு திணறல் ஏற்பட்டதால் இன்குபோட்டர் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. 15ம்தேதி குழந்தையை காணவில்லை என போலீசில் புகார். இது குறித்து போலீசார். விசாரித்ததில் சோழவந்தான் இரும்பாடியைச் சேர்ந்த மனோகரனின் இரண்டாவது மனைவி பாண்டீஸ்வரி (28), ஆண் குழந்தை ஆசையால் தேவியின் குழந்தையை கடத்தியதாக ஒப்புக்கொண்டார். இவ்வழக்கு கோர்ட்டில் நடந்தது. பாண்டீஸ்வரிக்கு பத்து நாள் சிறை தண்டனை, 500ரூபாய் அபராதம் விதித்து மாஜிஸ்திரேட் நாகராஜ் உத்தரவிட்டார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 107. | 25.11.09 | **மதுரை மாவட்டம்:** தேனி மாவட்டம் பெரியகுளத்தை அடுத்த கைலாசம்பட்டியை சேர்ந்தவர் திருமலை பல்வேறு தொழில்கள் செய்து வரும் அவர் புதிதாக ஹாலோ பிளாக் கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க கட்டிட வரைபடத்திற்கு அனுமதி அளிக்கக்கோரி மதுரை சின்ன சொக்கிகுளத்தில் உள்ள அலுவலகத்திற்கு விண்ணப்பித்தார். அங்கு பணியில் இருந்த சேதுராமன் (51) ரூ10ஆயிரம் லஞ்சம் கேட்டதாக திருமலை லஞ்ச ஒழிப்பு போலீஸ் குலோத்துங்க பாணிடியனிடம் புகார் செய்தார். திருமலை ரூ10 ஆயிரம் சேதுராமனிடம் கொடுத்தபோது மறைந்திருந்த போலீசார் சேதுராமனை கைது செய்தனர். | லஞ்சம் ஊழல் | தினத்தந்தி |
| 108. | 25.11.09 | **சென்னை மாவட்டம்:** மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சரக்குகள் பிரிவு முலம் வெளிநாட்டில் இருந்து வரும் பொருட்களுக்கு | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுங்கவரி போட்டு சுங்க இலாகா அதிகாரிகள் சுங்கவரியை வசுலித்து பொருட்களை உரியவர்களிடம் கொடுப்பார்கள் சென்னை விமான நிலையத்தில் சரக்குகள் பிரிவில் திடீர் சோதனை நடத்தினார். அப்போது ஜி.குமார்(40), என்ற ஏஜெண்ட் சுங்கவரி இல்லாமல் பொருட்களை எடுத்துவருவதற்காக அதிகாரிகளிடம் ஒரே நேரத்தில் 7.லட்சத்து 80 ஆயிரம் லஞ்ச தொகை வாங்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். சிபிஐயை பார்த்ததும் பணத்தை வெளியில் கடத்தி சென்று விட்டார். சோதனையில் கஸ்டம்ஸ் அதிகாரிகள் பெருமளவில் லஞ்ச ஊழலில் ஈடுபட்டு சுங்கவரி வசூலிக்காமல் அரசுக்கு பல கோடி நஷ்டம் ஏற்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அதிகாரிகள் 9 பேர் கைது செய்யப்பட்டனர். | | |
| **109.** | 25.11.09 | **புதுடெல்லி மாவட்டம்:** சத்யம் கம்ப்யூட்டார் நிறுவன ஊழல் வழக்கில் சாதகமான தீர்ப்பு வழங்குவதற்காக ரூ.7லட்சம் லஞ்சம் வாங்கிய கம்பெனி சட்ட வாரிய உறுப்பினர் வாசுதேவன். சி.பி.ஐ.அதிகாரிகளிடம் கையும், களவுமாக பிடிபட்டார். அவருடைய அலுவலகம் மற்றும் வீடுகளில் சோதனை நடத்திய போது ரூ.55 லட்ச ரொக்கப்பணம் சிக்கியது. லஞ்சம் வாங்கிய வாசுதேவன், லஞ்சம் கொடுத்த சத்யம் நிறுவன செயலாளர் மனோஜ் இருவரையும் சி.பி.ஐ கைது செய்தது. அவர்கள் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| **110.** | 25.11.09 | **மதுரை மாவட்டம்:** சிந்துபட்டி போலீஸ் சரகம், முத்தையன்பட்டி காலனியில் குடியிருப்பவர் வடிவேல் மனைவி பாண்டியம்மாள்(20), விவசாய கூலி தொழிலாளி பக்கத்து வீட்டில் குடியிருப்பவர் கருப்பையா(48), பாண்டியம்மாள் வீட்டில் தனியாக இருக்கும்போது கருப்பையா விட்டிற்குள் நுழைந்த மானபங்கம் செய்ய முயன்றதகா கருப்பையா மீது சிந்துபட்டி போலீசில் பாண்டியம்மாள் புகார் செய்தார். அதன் பேரில் இன்ஸ்பெக்டர் ராஜேஷ்கண்ணா வழக்குப்பதிவு செய்து கருப்பையாவை கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **111.** | 25.11.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** புதுச்சேரி முதலியார் பேட்டையை சேர்ந்தவர் முருகதாஸ் இவரது மகள் சிவப்பிரியா(16), 10 வகுப்பு பள்ளி மாணவி தேர்வில் மதிப்பெண் குறைந்து எடுத்ததால் ஆசிரியர்கள் கண்டித்தனர். பெற்றறோர்களும் திட்டுவார்கள் என பயந்த மாணவி வீட்டிற்கு வரவில்லை அதிர்ச்சியடைந்த பெற்றோர் பல இடங்களில் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேடியும் கிடைக்காமல் போலீஸில் புகார் செய்தனர். பஸ்டாப்பில் தனியாக நின்றதைப் பார்த்த கள்ளக்குறிச்சியை சேர்ந்த நடராஜன்(24) என்பவர் சிவபிரியாவை அழைத்துச் சென்று பலாத்காரம் செய்துள்ளார். நேற்று இரவு சரலூர் அருகே சிவபிரியாவை விட்டுவிட்டு அவர் தலைமறைவாகி விட்டார். மோசமான நிலையில் சிவபிரியா இறந்தார். அவர் கொடுத்த புகாரின் பேரில் நடராஜனை கைது செய்தனர். | | |
| 112. | 25.11.09 | **மதுரை மாவட்டம்:** சின்னபூலாம்பட்டியைச் சேர்ந்த கிராமநிர்வாக அலுவலர் பாட்சா, அதே பகுதியைச் சேர்ந்த வீரம்மாளுக்கும், வி.ஏ.ஓ உறவினருக்குமிடையே இடப்பிரச்சனை இருந்து வந்தது. வி.ஏ.ஓ., வீரம்மாளை தாக்கியதாக சாப்டூர் போலீஸில் புகார். இதுகுறித்து போலீசார் வி.ஏ.ஓ. மீது வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 113. | 25.11.09 | **மதுரை மாவட்டம்:** விராட்டிபத்தைச் சேர்ந்தவர் ராஜசேகரன் மகன் அசோக்தயாளன்(29) இவரும் மேலமாசி வீதியைச் சேர்ந்த கனிமொழி(27) என்பவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். ராஜசேகரனுக்கு ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளனர். தன்னை ஏமாற்றி திருமணம் செய்த அசோக்தயாளன் மீது நடவடிக்கை எடுக்கும்படி தெற்கு வாசல் காவல்நிலையத்தில் புகார். போலீசார் வழக்குப்பதிவு செய்து அசோக் தயாளனை கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 114. | 25.11.09 | **மதுரை மாவட்டம்:** தேனி அருகே முத்துதேவன்பட்டியை சேர்ந்த கருப்பசாமி இவரது மகள் மகேஸ்வரி(19), உப்புகோட்டையை சேர்ந்த சமுத்திரகனி(23) இருவரும் தனியார் மில்லில் வேலை பார்த்து வந்தனர். மகேஸ்வரி ஏற்கனவே திருமணம் செய்து கொண்டவர். இருப்பினும் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். மகேஸ்வரிக்கு பழைய கணவருடன் தொடர்பு இருப்பதாக சந்தேகப்பட்டு அடிக்கடி தகராறு செய்துவந்தார். இதே பிரச்னை காரணமாக அடித்ததில் மகேஸ்வரி இறந்தார். இது தொடர்பாக புகாரின் பேரில் வீரபாண்டி போலீசார் சமுத்தரக்கனியை கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 115. | 25.11.09 | **நெல்லை மாவட்டம்:** பாளையங்கோட்டை சமாதானபுரத்தை சேர்ந்த மனோகரன்(43), ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன்(36), இருவரும் நில புரோக்கர் தொழில் செய்து வந்தனர். இருவருக்கும் | காவல்நிலைய வன்முறை | தமிழ்முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடையே நிலத்தகராறு ஏற்பட்டு மனோகரன் மீது கோபமாக இருந்த சுப்பிரமணி தன் கையை தானே வெட்டிக் கொண்டு மனோகரன் தன்னை கொல்ல முயற்சி செய்தாக போலீசில் புகார். மனோகரனை கைது செய்து சிறையில் அடைத்தனர். மனோகரன் மதுரை கோர்ட்டில் மனு செய்தார். அதில் போலீசார் தன்மீது பொய் வழக்கு போட்டுள்ளதாக கூறினார். இவ்வழக்கை விசாரித்த போலீசார் மனோகரன் மீது பொய்வழக்கு பதிந்த இன்ஸ்பெக்டர் மகாலிங்கம் நேற்று சஸ்பெண்ட் செய்யப்பட்டார். | | |
| **116.** | 25.11.09 | **மதுரை மாவட்டம்:** திருநகர் அருகில் உள்ள தென்பழஞ்சி தலீத் பெண் ஆண்டிச்சி. இவரது மருமகள் பாக்கியலெட்சுமி பொது குழாயில் தண்ணீர் பிடிக்கச் சென்றார். தண்ணீர் பிடிக்க தடை விதித்ததோடு பாக்கியலெட்சுமியை ஆபாசமாக பேசியுள்ளனர். ஆண்டிச்சி திருநகர் காவல் நிலையத்தில் புகார். தெரிவித்துள்ளார். 19.11.09 உயர் சாதியினர் ஆண்டிச்சியின் வீட்டை அடித்ததோடு ஆண்டிச்சியையும் மருமகளையும் அடித்துத் தாக்கி வன் கொடுமை செய்துள்ளனர். | தலீத் எதிரான வன்முறை | Hindu நாளிதழ் |
| **117.** | 26.11.09 | **இராமேஸ்வரம் மாவட்டம்:** பாம்பன் தெற்கு கடற்கரையில் நேற்று முன்தினம் 100 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு சென்றனர் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது 2 ரோந்து கப்பலக்ளில் இலங்கை கடற்படையினர் 60 படகுகளை சுற்றி வளைத்தனர். படகுகளில் புகுந்து தாக்குதல் நடத்தினர். மீன்படிக்க பயன்படுததும் பெயிய யிற்றால் அடித்து தகாத வார்த்தைகளால் திட்டினர். பிடித்து வைத்திரந்திருந்த இறால். சிங்கி, கணவலாய், விலை உயர்நத மீன்களை கொள்ளையடித்தனர். இதனால் மீனவர்கள் வெறும் கையுடன் கரைதிரும்பினார். இது குறித்து கியூபிராஞ்ச் போலீசார். விசாரணை நட னார்கள். இதுபற்றி பாம்பன் மீனவர்கள் சுரேஷ், செல்வம், முத்துகுமார், ஆகியரோர். நடந்த சம்பவங்களை கூறினார். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **118.** | 26.11.09 | **மதுரை மாவட்டம்:** கூடக்கோவிலல்அருகே உள்ள குமாரலிங்கபுரத்தை சேர்ந்தவர் முத்துச்சாமி மனைவி சுப்பம்மாள்(60), அதே ஊரைச்சேர்ந்த போஸ்(35), மகாலிங்கம்(26), கழிவுநீர் ஊற்றியது தொடர்பாக சுப்பம்மாளுக்கும் போஸ் மகாலிங்கத்திற்கம் பிரச்சசினை ஏற்பட்டது. இதில் இருவரும் சேர்நந்து சுபப்மமாளை தரக்குறைவாக பேசி, கம்பால் தாக்கினார்களாம் இது குறித்து | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுப்பம்மாள் கூடக்ககோவில் போலீசில் புகார். போலீசார் வழக்குப்பதிவு செய்து போஸ், மகாலிங்கத்தை கைது செய்தனர். | | |
| 119. | 26.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நத்தம்பட்டி ஆர்.சி.நடுநிலைப்பள்ளியில் 400 மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளி தலைமை ஆசிரியராக பேச்சிமுத்து இருந்தார். பேச்சிமுத்து இந்துவாக இருப்பதால் அவரை பள்ளி நரிர்வாகம் பதவியிறக்கம் செய்தது. பள்ளி மாணவிகள் பூ,பொட்டு, வைக்கவோ கூடாது, இந்துக்களுக்க ஆசிரியர் பதவி வழுங்க மறுப்பு ஆதலால் நேற்று109 குழந்தைகளின் பெற்றோர் டிசி வாங்கி சென்றனர். மாவட்ட கல்விஅலுவலர் போஸ் கூறுகையில் தலைமை ஆசிரியர் வாய் பேசமுடியாத நிலையில் இருப்பத்ால் அவரை விருப்பு ஓய்யிவல் செல்ல அறிவுறுத்தினேன். பெற்றோர்களிடமம்சமரச பேச்சுவார்த்தையில் முன்னேற்றமும் ஏற்படாததால் அவர்கள் விருப்பபடியே மாணவர்களுக்க 'டிசி' வழங்க உத்தரவிட்டதாக கூறினார். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 120. | 26.11.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** அம்பாசமுத்திரத்திலிுருந்த நெல்லைக்கு வந்த ஒரு லாரி குறித்து பறக்கும் படை தாசிலதார் அந்தோணி முத்துவிற்கு தகவல் வந்தது. அவர் அந்த லாரியை மடக்கியபோது (டி.என்.39.–டி–8998) கிளினர் தப்பி ஓடிவிட்டார். லாரிளிலிருந்து 10 டன் ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்ட்டது. டிரைவர் ஆலங்குளம் குமரேஷன் கைது செய்ய்ப்பட்டார். | ரேஷன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 121. | 26.11.09 | **தேனி மாவட்டம்:** அல்லிநகரம் அரசு மேலிநிலைப்பள்ளி தலைமை அசிரியர் மணி, இவருடன் ஆசிரியர்கள் தவமணி, வாலகுரு, முகில்மாறன், மகேஸ வரன் , ராஜன், ஆகியோர் மாணவர்களை அடித்து அவமானப்படுத்தி வருவதாக விளஸ் 2 மலைப்பிரிவு மாணவர்கள் ஆனந்தராஜ், ராஜா, தினேஷ்ராஜா உட்பட 15 பேர் அல்லிநகரம், போலீசில் புகார் மனு அளித்தனர். இன்ஸ்பெக்டர் அந்தோணி, ஆரோக்கியதாஸ், விசாரணை நடத்தினார். ஆசிரியர்கள் கூறுகையில் படிக்கவில்லை என்பதையும், பள்ளி சொத்தையும் சேதப்படுத்தியதை கண்டித்ததற்கு அடித்ததாக கூறினார். | மாணவர்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 122. | 26.11.09 | **மதுரை மாவட்டம்:** பொன்னகரம் பகுதியைச் சேர்ந்த சின்னையா மகள் முத்துலட்சுமி(16), அரசு பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார். | பள்ளி மாணவி மாயம். | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீட்டில் இருந்த வெளியே சென்ற இவர் காணாமல் போய் விட்டார். கரிமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | | |
| 123. | 26.11.09 | **மதுரை மாவட்டம்:** வண்டியூர் பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்தவர் பாண்டி இவருக்கும் இவரது உறவினரான முனியாண்டிக்கும் முன் விரோதம் இருந்தது. நேற்று முன் தினம் சாக்கடை சண்டையில் முனியாண்டி, அவரது மனைவி லட்சுமி, மகன் பாண்டி, மகள் முத்து, மற்றும் உறவினர்கள் 10 பேர் சேர்ந்து பாண்டியராஜனை தாக்கி தடுக்க வந்த பாண்டியாராஜின் சகோதரியான சட்டக்கல்லூரி மாணவி பஞ்சுமீனா மற்றும் அவரது பெற்றோர் ஆகியேரையும் தாக்கினர். இது குறித்து கருப்பாயூரணி போலீசார் வழக்குபதிவு செய்து முனியாண்டி. அவரது மனைவி ஆகியோரை கைது செய்தனர். | சட்டக்கல்லூரி மாணவி தாக்கப்பட்டார். | தமிழ்முரசு |
| 124. | 26.11.09 | **திருவாரூர் மாவட்டம்:** மன்னர்குடி ஒன்றியம் சவளக்காரன் ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர வேண்டும். என உரிய துறைகளுக்கு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இங்கு700க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர் மன்னை, நகரம், வங்கார பேரையூர், சித்தாம்பூர், வாஞ்சூர், உள்ளிட்ட பத்துக்கு மேற்பட் சிராமங்களின் ஆதிதிராவிடா குடும்பங்களைச் சேர்ந்த90 சதவீதம் மாணவர்களும் மற்ற பிரிவுகளில் ஏனைய மாணவர்களும் பயின்று வருகின்றனர். கூடுதல் கட்டிட வசதி இல்லததால் மாணவர்கள் ஆசிரியர்கள், சிரமப்படுவதாக பொதுமக்கள் கருத்து ஆதிதிராவிட நலத்துறை நிர்வாகத்திற்கு வேண்டுகோள் விடுத்தனர். | வசதியின்மை | தீக்கதிர் |
| 125. | 26.11.09 | **சென்னை மாவட்டம்:** அய்யப்பன் தாங்கலில் அரசு நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருபவர் மாரிகண்ணன்(30), அதே பள்ளியில் 5–ம் வகுப்பு படித்து வரும் சசிகலா(10), பெயர் மாற்றப்பட்டுள்ளது. என்ற மாணவியிடம் தகாத செயல்களில் ஈடுபட்டுள்ளார். சில்மிஷம் செய்துள்ளார். இது குறித்து சசிகலா பெற்றோர். பள்ளியில் புகார் செய்தனர். உரிய நடவடிக்கை எடுக்காமல் வீட்டில் போய் ஏன் கூறினாய் என்று மிரட்டியதாக தெரிகிறது, இதையடுத்து சசிகலாவின் பெற்றோர். எஸ்.ஆர்.,எம்.சி., போலீஸில் புகார் செய்தனர். போலீசார் இது குறித்து பள்ளி ஆசிரியர்களிடம் விசாரித்து வருகின்றனர். | பள்ளி வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 126. | 27.11.09 | **தேனி மாவட்டம்:** போடி வரதராஜ் நகரைச் சேர்ந்தவர் நளினி(36), இவர் வெப்சைட் நிறுவனத்தின் மூலம் மாப்பிள்ளை தேடினார். பொன்குமரன்(38), நியூயார்க் கம்பெனியில் நிர்வாக மேலாளராக இருப்பதாக கூறியதை நம்பி திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு பின்தான் அவர் பல பெண்களை ஏமாற்றி திருமணம் செய்துள்ளார். தன்னிடம் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் பணத்தை ஏமாற்றி உள்ளதாக தென்மண்டல ஐ.ஜி. அலுவலகத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 127. | 27.11.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** அம்மாண்டிவிளையைச் சேர்ந்தவர் பார்த்தசாரதி கடியப்பட்டணத்தில் உள்ள 6 சென்ட் நிலத்தை தனக்கும், சகோதரா ரகுபதிக்கும் பாகப்பிரிவினை செய்ய தாலுகா அலுவலத்தில் மனு செய்தார். இது தொடர்பாக சர்வேயர் மனோகரன் நிலத்தை அளப்பதற்கு ரூ.1000 லஞ்சம் கேட்டதாக லஞ்சஒழிப்பு போலீஸில் புகார் செய்தார். போலீசார் ஆலோசனைப்படி ரூ.1000ஐ. மனோகரனிடம் பார்த்தசாரதி கொடுத்தார். அங்கிருந்த போலீசார் மனோகரனை கைது செய்தனர். | லஞ்சம் | தினகரன் |
| 128. | 27.11.09 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி அருகே ஊஞ்சவேலாம்பட்டி உடுமலைபேட்டை ரோட்டில் பொள்ளாச்சி போலீசாரும் ரோந்து படையினரும் வாகன தாணிக்கையில் ஈடுபட்டு வந்தனர். அப்போது கேரளாவை நோக்கி ஒரு லாரி வந்தது தடுத்து நிறுத்தினர் வாரியில் இருந்த 50 கிலோ மூட்டைகளாக 200 மூட்டை ரேஷன் அரிசி இருந்ததை கண்டுபிடித்தனர் மொத்தம் 10 டன் ரேஷன் அரிசி இருந்தது. போலீசார் லாரி டிரைவர் செந்தில்குமார்(28), கிளீனர் ரமேஷ்(27), இருவரையும் கைது செய்தனர். லாரி உரிமையாளர் சின்னராஜ் என்பவரை தேடி வருகின்றனர். லாரியை பறிமுதல் செய்தனர். | ரேஷன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 129. | 27.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் இரவு பகலாக வருவாய்த்துறை, வனத்துறை ஆதரவுடன் மணல் கடத்தல் நடைபெற் ஜறு வந்தது. தாசில்தார் மணல் காளிமுத்து, ரோந்து சுற்றி வந்தனர். தாசில்தார் வருவது மொபைல் மூலம் தகவல் வெளியானது. அனத்தலை அறு, முடங்கியாறு, கருவாட்டுப்பாறை, ஆற ல் மணல் அள்ளிக் கொண்டிருந்த வாகனங்கள் தனியார் ே தாட்டங்கிளல்மறைத்து வைத்தனர். வழக்கம் போல் வந்த முரளி என்பவரின் டிராக்டர், சிவமணி என்பவரின் டிராக்டர்., சீமான் | மணல் கடத்தல் | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்பரது டிராக்டர்களை பிடித்தனர். மன்று மணலல்கடத்தல் டிராக்டர்களை பிடித்து கலெக்டருக்கு தகவல் கொடுத்தனர். | | |
| 130. | 27.11.09 | **மதுரை மாவட்டம்:** இந்திரா நகரைச் சேர்ந்தவர் சுந்தரவள்ளி இவரது கணவர் விஜயகுமார், இவர் வெளி நாட்டில் வேலை பார்த்து அனுப்பும் பணத்தை சுந்தரவள்ளி வங்கியில் போட்டு வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த நடராஜன், அவரது மனைவி செல்லம்மாள் இருவரும் சுந்தரவள்ளியிடம் வங்கியில் வட்டி குறைவு நாங்கள் அதிகமாக வட்டி தருகிறோம் என கூறி ரூ.11/2 லட்சம் வாங்கி வட்டியும், பணத்தையும் கொடுக்காமல் ஏமாற்றினர். இது குறித்த சுந்தரவள்ளி கொடுத்த புகாரின் பேரில் நடராஜன், அவரது மனைவி செல்லம்மாள் ஆகியோர் மீது தல்லாகுளம் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 131. | 27.11.09 | **நெல்லை மாவட்டம்:** அம்பாசமுத்திரம் அருகே உள்ள சிறுவன் குளத்தைச் சேர்ந்த பாண்டி மகன் மாதவன்(21), குமரவேல் மகன் பெருமாள்(35), இருவரும் பிச்சை மணி மகன் முருகன் என்பவரை கொலை செய்ததாக கல்லிடைக்குறிச்சி போலிசாரால் தேடப்பட்டனர். இருவரும் நேற்று மதுரை–4வது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சரணடைந்தனர். | காவல் நிலைய வமுறை | தமிழ்சுடர் |
| 132. | 27.11.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** அம்பாசமுத்திரம் வீரவநல்லூரைச் சேர்ந்த முத்துலட்சுமி ஐ.கோர்ட் கிளையில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது எனது கணவர் ஆதிமூலம் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பான விசாரணையில் டிஐஜி கண்ணப்பன், மற்றும் போலிசார் என் கணவரை பற்றி தவறாக பேசினர். அதனால் அவர்கள் மீது மனித உரிமை ஆணையத்திடம் புகார் தெரிவித்தேன். அந்த கோபத்தில் என் மீது மணிகண்டன் என்பவரை கொலை செய்ததாக கைது செய்வதற்கு கங்கணம் கட்டிவருவதால் விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்ற உத்தரவு விட வேண்டும். என கூறியுள்ளார். இப் புகார் தொடர்பாக உள்துறை செயலாளர், போலீஸ் டிஐஜி., எஸ்.பி, ஆகியோர் பதிலளிக்க தனி நபார் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். | காவலர்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 133. | 27.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேற்கு ஒன்றியத்தில் சிறுவாலை, பிள்ளையார்நத்தம், அம்பலத்தாடி, வயலூர் பிரிவு ஆகிய கிராமங்கள் உள்ளன, இங்குள்ள மாணவர்கள் படிப்பதற்கு குமாரம், கூடல்நகர், பாத்திமாகல்லூரி, | அரசு தன்கடமை செய்யாமை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகபூப்பாளையம் அரசுப் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு வருகின்றனர். இங்கு கடந்த 5 தினங்களுக்கு மேலாக பேருந்துகள் செல்லவில்லை கீழ நெடுங்குளத்தோடு திரும்பி விடுகிறது. சிறுவாலை செல்லும் வழியில் இருபுறமும் பள்ளம் இருப்பதால் பேருந்துசெல்லவில்லை பேருந்து செல்லததால் அங்குள்ள மக்கள், மாணவ, மாணிவியர் 3 கீ.மீ நட்ந்து சென்று வருகின்றனர். இது குறித்து தகவல் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்தனர். | | |
| 134. | 28.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஆரோக்கியசாமி நகர் ஜெயராமன் மகன் பாண்டி(18), இவர் பிளஸ் 2 படித்து வந்தார். திண்டுக்கல் டுட்டோ ரியல் கல்லூரியில் சேர்த்து விட்டனர். பாண்டி சரிவரச் செல்லவில்லை இனால் பெற்றோர் திட்டியதால் மனமுடைந்த பாண்டி குருவப்பநாயக்கன் குளம் பகுதியில் விஷம் குடித்து இறந்து கிடந்தார். இது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். | மாணவர் மாணவியர் தற்கொலை | தமிழ்முரசு |
| 135. | 28.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு வெங்கடாஸ்திரி கோட்டையைச் சேர்ந்தவர் நல்லுச்சாமி மகள் புவனேஸ்வரி(18), தனியார் பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். சரியாக படிக்காததால் பெற்றோர் திட்டியதால் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மண்ணெண்ணெய் உற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து வத்தலக்குண்டு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | மாணவர் மாணவியர் தற்கொலை | தமிழ்முரசு |
| 136. | 28.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** மேற்கு போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தவர் மோகன்தம்பிராஜ், இவர் மீது பல்வேறு புகார். அவர் போலீஸ் நிலையத்தில வைத்து கட்டப்பஞ்சாயத்து செய்வதாகவும் புகார் மனுக்கள் மீது வழக்கு பதிவு செய்யாமல் மனு ரசீது மட்டும் கொடுத்து புகார் மனுதாரரை அனுப்பி வைத்துள்ளார். மேல் அதிகாரிகளால் பல முறை எச்சரிக்கை செய்யப்பட்டார். இந்த நிலையில் வழக்கு விசாரணையில் முறைகேடுகள் செய்ததால் ஐ.ஜி.பாலசுப்பிரமணியன் சஸ்பெண்ட செய்ய உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 137. | 28.11.09 | **திருவண்ணாலை மாவட்டம்:** புவனகிரியை சேர்ந்தவர் அமர்நாத்(18), இவர் செய்யாரில் உள்ள ஒரு தனிார் பொறியியல் கல்லூரியில் சிவின் இன்ஜீனியரிங் முதலாமாண்டு படித்து வருகிறார். அதே விடுதியில் இராண்டாம் ஆண்டு தங்கி படித்து வரும் மாணவர் வால்டர், | ஈவ் டீசிங் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமர்நாத்தை அடித்து, முட்டிபோட வைத்து, ராகிங் செய்தாக புகார், விசாரணையில் அமர்நாத்தை இரண்டாமாண்டு மாணவர்கள் செல்வராஜ், உதயமூர்த்தி உள்பட 12 பேரும் ராகிங் செய்ததால் அவர்கள் கல்லூரியில் இருந்து சஸ்பெண்ட செய்யப்பட்டனர். | | |
| 138. | 28.11.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** தஞ்சை இருகே வல்லத்தில் நள்ளிரவு வரை கடைகளை திறந்து வைத்திருந்ததால் கடை உரிமையாளர்களை காவல் நிலையம் அழைத்து வந்து போலீசார் எச்சரித்தனர். தொழில் வர்த்தகா சங்க நிர்வாகி மாணிக்கம் காவல் நிலையம் சென்ற பேசினார். போலீஸார் தன்னை தாக்கியதாக மருத்துவமளையில் சேர்ந்தார், மேலும் திருச்சி–தஞ்சை சாலையில் கடை உரிமையாளர்கள் மறியலில் ஈடுபட்டனர். 19 பேர் கைது செய்யப்பட்டனர். | காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 139. | 28.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** செல்லையாபுரத்தைச் சேர்ந்தவர் ஹெலன்எஸ்தர்(35), மதுரை திருப்பாலை பாரத் நகரை சேர்ந்த கிறிஸ்டோபருக்கும் திருமணம் நடந்தது. இத்தம்பதியர் குவைத் நாட்டில் வசித்து வந்தனர். கூடுதல் வரதட்சனைக் கேட்டதாக திருப்பரங்குன்றம் மகளிர் போலீஸில் புகார். மாமனார் லாரன்ஸ், மாமியார் ராமாபாய், கணவர் கிறிஸ்டோபர், மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 140. | 28.11.09 | **மதுரை மாவட்டம்:** திருநகரை சேர்ந்தவர் சாலமன் மகள் ஜாஸ்மின்(37), இவரது கணவர் வேலாயுதம் கூடதல் வரதட்சணைக் கேட்டு கொடுமைபடுத்துவதாக திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் புகார். இது குறித்து கணவர் உள்பட 3பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 141. | 28.11.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** தேவி நகர் ஜெயா தெருவைச் சேர்ந்தவர் துரைராஜ் மகன் சவுரிராஜன்(28) இவர் சைக்கிளில் சென்றபோது மூங்கில் மண்டபம் பகுதியில் பணியிலிருந்த போக்குவரத்து எஸ்.ஐ., தங்கராஜ்(27), அவரை மடக்கி பிடித்து ஆவணங்கள் சரியாக இருந்தும், வங்கி அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு 2000 ரூபாய் லஞ்சம் கோட்டதாக லஞ்ச ஒழிப்பு போலீஸில் புகார் செய்தார். 2000 தங்கராஜிடம கொடுத்தார் அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் தங்கராஜ்யை கைது செய்தனர். | லஞ்சம் | தினமலர் |
| 142. | 28.11.09 | **மதுரை மாவட்டம்:** கே.புதூரை சேர்ந்தவர் ராஜா இவரது மகள் பொன்மீனா(26), மதுரை | வரதட்சனை கொடுமை | தமிழசுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆயுதப்படை சப்–இன்ஸ பெக்டராக வேலை பார்த்து வருகிறார். இவரது கணவர் கணேசன்(30), கூடுதல் வரதட்சனைக் கேட் டு கணவர், மாமியார், மாமனார், கொடுமைபடுத்தியதாக தல்லாகுளம் காவல்நிலையத்தில் புகார்., போலீசார், கணவர் கணேசன், பெற்றோர் தங்கம், பெரமாயி மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். | | |
| 143. | 28.11.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** கெலமங்கலம் ஒன்றியம் ஜார்க்கலட்டி சேர்ந்தவர் எல்லம்மா இவருக்கு 8 குழந்தைகள் அண்மையில் கணவர் காலமானார், தனது 3 மகள் சுருணா(17), இவரை கட்டாயபடுத்தி சூடுபோட்டு தனது தம்பி நாராயணப்பாவுக்கு இராண்டவதாக திருமணம் செய்து வைத்தார். இது குறித்து சுகுணா போலீஸில் புகார். இது குறித்து வழக்கு பதிவு செய்த போலீஸார் எல்லம்மா அவரது தம்பி நாராயணப்பா, உறவினரான மதனசியம்மா அகியோரை கைது செய்தனர். | கட்டாய திருமணம் | தீக்கதிர் |
| 144. | 28.11.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தில் பிகேஎன், ஆண்கள் பள்ளி உள்ளது. பிகேஎன்பெண்கள் பள்ளி கல்லூரி உள்ளது. இங்கு டிசம்பர் 1தேதி அப்துல்கலாம் வருகிறார். அதனால் இங்கு படிக்கும் மாணவர்களிடம் தீவிர வசூல் நடந்து வருவதாக புகார். இது குறித்து தலைமையாசிரியரை தொடர்பு கொண்டு கேட்ட போது பதிலளிக்க மறுத்துவிட்டார். நிர்வாக பொறுப்பாளர் கணேசனிடம் கேட்டபோது சிறுவர்களுக்கு ரூ100யும், பெரிய மாணவர்களுக்கு 200 வசூலிக்கப்படுவதாகக் கூறினார். | லஞ்சம் | தீக்கதிர் |
| 145. | 28.11.09 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புத்தூர் அருகே டி.புதூர் பகுதியைச் சேர்ந்தவர் நர்மதா மர்மமான முறையில் இறந்தார். காவல் துறையினர் தற்கொலை என வழக்கு பதிவு செய்தனர். மாதர் சங்கத்தின் தலையீட்டைத் தொடர்ந்து 60 நாட்களுக்கு பிறகு அவரது கணவர் வேல்முருகனை தற்கொலைக்கு தூண்டியதாக கைது செய்தனர். நர்மாதவின் அண்ணன் காசிநாதன் கூடுதல் வரதட்சனைக் கேட்டு கணவர், மாமியார், கொடுமை செய்ததாக கூறியதை போலீஸார் பதிவு செய்யவில்லை கணவருக்கு வசதியாக வழக்கு பதிவு செய்தனர். சுமார் 60 நாட்களுக்கு பிறகு கணவரை கைது செய்தது ஏன்? நடவடிக்கை எடுக்க கால தாமதம் ஆனது ஏன்? என பெற்றோர்கள் கேட்கின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| **146.** | 29.11.09 | **நெல்லை மாவட்டம்:** பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர் நாகமணியம்மாள் இவர் மதுரை கிளையில் ஒரு மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எனது சகோதரர் கணேசன், இவர் மனைவி ரேவதி, வரதட்சணை கேட்டு கணவர், மாமனார், நாத்தனார், கொடுமைபடுத்துவதாக ரேவதி பாளையங்கோட்டை போலீஸில் புகார். போலீஸார் எவ்வித விசாரணையும் நடத்தாமல் மாஞ்சோலையில் இன்ஸ்பெக்ராக பணியாற்றி வரும் ரேவதியின் அண்ணன் முத்துவேல் வலியுறுதலின் பேரில் வழக்குபதிவு செய்து என்னையும் எனது தந்தை, தம்பி கணேசன் 3 பேரையும் கைது செய்தனர். மேலும் பல பொய் வழக்குகள் போடுவதாக முத்துவேல் மிரட்டுகிறார். இது சம்பந்தாக நெல்லை சரகபோலீஸ் டி.ஐ.ஜி., சூப்பிரண்ட், ஆகியோருக்கு மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவே இந்தமனுவை பரிசீலித்து சப்இன்ஸ்பெக்டர் முத்துவேல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கூறப்பட்டு இருந்தது. மனுவை விசாரித்த நீதிபதி நெல்லை போலீஸ் சூப்பிரண்டு 8 வாரத்துக்குள் சட்டத்துக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **147.** | 29.11.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் எம்.மீனாட்சிபுரத்தை சேர்ந்தவர் சரவணக்குமார், இவரது மனைவி சிலம்பு செல்வி(20), கூடுதல் வரதட்சனைக் கேட்டு கணவர், மற்றும் மாமியார், மாமனார், நாத்தனார், பாட்டி ராஜாமணி, துன்புறுத்துவதாக மதுரை சமூக நலத்துறை அலுவலகத்தில் சிலம்பு செல்வி புகார் செய்தார். திருமங்கலம் போலீஸ் சூப்பிரண்ட் விஜயரகுநாதன், கணவர் சரவணக்குமா,ர் உள்பட 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **148.** | 29.11.09 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை ரோட்டில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் நர்சாக வேலைபார்த்து வருபவர் மேரி(33) அதே ஆஸ்பத்திரியில் சித்த மருத்துவராக வேலை செய்பவர் சாஸ்திரி, இருவருக்கு இடையே பழக்கம் காதலாக மாறி திருமணம் நடந்து 8 ஆண்டுகள் ஆகின்றன. இன்னிலையில் சாஸ்திரிக்கு வேறு பெண்ணுடன் திருமணம் நடந்திருப்பது அறிந்த பேரி சூரம்பட்டி போலீஸ் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையத்தில் புகார் செய்தார். போலீஸார் இருதரப்பினரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். | | |
| 149. | 29.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே பந்தல்குடியைச் சேர்ந்தவர் சுந்தரராஜ் மகள் ஜெயந்தி(22), அதே ஊரைச் சேர்ந்த காளிமுத்து இருவரும் காதலித்த சில வாரங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டனர். இந்த நிலையில் காளிமுத்துவின் உறவினர்களான ஜோதி, கோமதி சின்னச்சாமி 3 பேரின் தூண்டுதலின் பேரில் ஜெயந்தியை சித்ரவதை செய்ததாக ஜெயந்தி அருப்புக்கோட்டை மகளிர் போலிஸ் நிலையத்தில் புகார். இதுகுறித்து போலிஸார் வழக்குப்பதிந்து காளிமுத்து உள்பட 4 பேர் மீது விசாரணை செய்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 150. | 29.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் மலையடிப்பட்டிச் சேர்ந்தவர் ஞானசேகரன்(33), சேத்தூர் பவுல் தேவயாலயத்தில் பாதிரியராக இருக்கிறார். மேட்டுப்பட்டியைச்சேர்ந்த கருப்பன் மகள் தங்கேஸ்வரி(23), சர்ச்சுக்கு வந்தபோது பாதிரியாருக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. தங்கேஸ்வரியை பாதிரியர் வேனில் கடத்தியதாக அவரது அண்ணன் இசக்கிமுத்து சேத்தூர் போலிஸ்சில் புகார். இன்ஸ்பெக்டர் ஜெயக்குமார், பாதிரியரையும், வேன் டிரைவர் அலாவுதீனையும் கைது செய்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 151. | 29.11.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** பல பகுதிகளில் கிளினிக் நடத்தி வரும் போலி டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி பொன்னமராவதி டி.எஸ்.பி., சேதுவிடம், தஞ்சை மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு மாநில பொதுச்செயலலர் அமீர் புகார் கொடுத்தார். நடவடிக்கை எடுக்க 4 ஆயிரம் லஞ்சம் தருமாறு டி.எஸ்.பி.சேது கேட்டுள்ளார். இதுகுறித்து அமீர் லஞ்ச ஒழிப்பு போலீஸில் புகார். அமீர் பணத்தை சேதுவிடம் கொடுத்தபோது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் சேதுவை கைது செய்தனர். | லஞ்சம் | தினமலர் |
| 152. | 29.11.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** வீரகேரளம் புதூர் அருகே வீராணத்தில் முருகேசன் என்பவரது ரைஸ்மில்லில் லாரிகளில் ரேஷன் அரிசி கேரளாவுக்கு கடத்தப்படுவதாக தகவல் கொடுத்தனர். எஸ்.ஐ.,கிரீடராஜன், தலைமையில் போலீசார் சோதனை நடத்தினர். அதில் 93 மூடை ரேஷன் அரிசியை போலீஸார் பறிமுதல் செய்தனர். லாரி டிரைவர் தினேஷ் ரைஸ்மில் உரிமையாளர் முருகேசன், நடராஜன் ஆகியோரிடம் விசாரித்து வருகின்றனர். | ரேஷன் அரிசி கடத்தல் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 153. | 29.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் தாலுகா போத்திரெட்டிபட்டி விஏஓவேலு, இவர் மார்ச்சு மாதத்தில் ஓய்வு பெற உள்ளார். இந்நிலையில் போத்திரெட்டிபட்டி சேர்ந்த காளியம்மாள் பட்டா மாறுதலுக்கு விஏஓ. வேலுவை அணுகினார். ரூ3 ஆயிரம் லஞ்சம் வாங்கியுள்ளார். இது குறித்து காளியம்மாள் கலெக்டர் சிரிதாமஸ் வைத்தியனிடம் புகார் செய்தார். கலெக்டர் விசாரணையில் லஞ்சம் வாங்கியது உண்மை என தெரிந்தது. அதலால் விஏஓ.,வேலுவை சஸ்பெண்ட செய்ய உத்தரவிட்டார். | லஞ்சம் | தினகரன் |
| 154. | 29.11.09 | **மதுரை மாவட்டம்:** மேலுரை அடுத்த கீழவளவு புலிமலைப்பட்டிக்கும் இடையே பெரியாறு கால்வாயில் ஒரு சாக்கு மூட்டை கடந்த 25 தேதி கிடைத்ததும் கிராம நிர்வாக அதிகாரி மாரிமுத்து போலீசுக்கு தகவல் கொடுத்தார். சுமார் 40 வயது பெண் ஒருவரின் சடலம் இது குறித்து போலிஸார் விசாரணையில் பதினெட்டாங்குடியைச் சேர்ந்த அழகப்பன்(32), இவருக்கும் டி.ஆர்.ஓ.காலனியைச் சேர்ந்த ஸ்டெல்லாவிற்க்கும் பழக்கம் ஏற்பட்டது. ஸ்டெல்லாவிடமிருந்து 1பவுன் நகையை வாங்கி அடது வைத்ததாகவும் திருப்பி தரச்சொல்லி ஸ்டெல்லா சண்டை போட்டதால் கழுத்தை நெறித்து கொலை செய்து சாக்கில் கட்டி போட்டதாகவும் ஒப்புக்கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 155. | 29.11.09 | **மதுரை மாவட்டம்:** கிருஷ்யாபுரம் காலனியைச் சேர்ந்தவர் செல்வம், இவர் திடீர்நகர் காவல் நிலையத்தில் ஏட்டாக பணியாற்றுகிறார். இதே பகுதியில் வசிப்பவர் ராமு இவர் மதிச்சியம் குற்றப்பிரிவில் ஏட்டாக உள்ளார். ராமு மகளை செல்வத்திற்கு திருமணம் செய்துள்ளனர். குடும்பத்தகராறு தொடர்பான புகாரில் செல்வம் ராமு குடும்பத்தாரிடம் தல்லாகுளம் போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் ராமு, அவரது மனைவி மகன், செல்வத்தை தாக்கினார், இது குறித்து செல்வம் கொடுத்த புகாரின் பேரில் ராமு மனைவி, மகன் இருவரையும் கைது செய்து போலீசார் ராமுவை தேடுகின்றனர். | குடும்ப வன்முறை | தமிழ்முரசு |
| 156. | 29.11.09 | **ராமேஷ்வரம் மாவட்டம்:** கச்சத்தீவு அருகே மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டு இருந்தபோது சிங்கள கடற்படையினர் 2 ரோந்து கப்பல்களில் வந்து மீனவர்களை தாக்கி விலை உயர்ந்த ரக மீன்களை கொள்ளையடித்ததுடன் திசைகாட்டு கருவிகயைும் எடுத்து கொண்டு | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீனவர்களை அடித்த துன்புறுத்தியதாக, கரை திரும்பிய மீனவர் அந்தோணி, கெவின்குமார், குமரவேல் ஆகியோர் தெரிவித்தனர். | | |
| **157.** | 29.11.09 | **புதுவை மாவட்டம்:** புதுவை முத்தியால்பேட்டை ஒத்தவாடை வீதியில் வசிப்பவர் ஏகாம்பரம்(39), இவரது மனைவி சரளா(35), நேற்று காலையில் 5 மணிக்கு வீட்டு வாசலில் கோலம்போட்டு கொண்டிருந்தார் அப்போது ஒரு வேன் வீட்டுவாசல் முன்பு நின்றது. அதிலிருந்து இறங்கிய 3பேர் சரளாவை கணவர் ஏகாம்பரம் கண் எதிரே கடத்திச் சென்றனர். ஏகாம்பரம் கொடுத்த புகாரின் பேரில் போலீஸார் விசாரணையில் சரளாவுக்கும் அவரது உறவினர் சிவாவுக்கும் இடையே கள்ளத்தொடர்பு இருந்தது இது கணவான் ஏகாம்பரத்திற்கு சமீபத்தில் தெரியவந்துள்ளது இதனை கண்டித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக காரில் வந்த சிவா சரளாவை அழைத்து சென்றுள்ளதாக கூறப்படுகிறது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| **158.** | 30.11.09 | **தேனி மாவட்டம்:** பொம்மிய கவுண்டன்பட்டியில் சேந்தவர் பெருமாள்செட்டியார், இவருக்கு இரண்டு மகன் பெருமாள் செட்டியார் இறந்து விட்டதாக திருப்பூரில் இருக்கும் இளைய மகன் முரளிக்கு தகவல் வந்தது. உடனே புறப்பட்டு வந்த முரளியை ஊரின் எல்லையில் தடுத்தார்கள் உறவினார்கள், ஊர்க்கட்டுப்பாட்டை மீறி காதல் திருமணம் செஞ்சிக்கிட்டவன் உன்னை ஊர்ல இருந்து ஒதுக்கி வச்சிருக்காங்க வீட்டுக்குள்ள வந்து காரியங்களில் கலந்துகிட்டா ஊர்க்காரங்க கலந்துக்க மாட்டாங்க நீ வராதப்ப என தடுத்தார்கள். இறுதி ஊர்வலம் ஊர் எல்லை தாண்டிய பிறகுதான் முரளியால் கலந்து கொள்ள முடிந்தது. முரளியின் அண்ணன் கவுன்சிலர் நவநீதனிடம் கேட்டோம் ஊர்க்கட்டுப்பாடு ஒண்ணு இருக்கு அதை மீற முடியாது என்று கூறினார். இதே போல் பொம்மியகவுண்டன்பட்டியில் 30–க்கும் மேற்பட்டோரை ஒதுக்கி வைத்திருப்பதாக இந்த ஊர் இளைஞர்கள் கூறினார்கள். யாரும் புகார் கொடுக்கவில்லை | தலித்களுக்கு எதிரான வன்முறை & சமூக புறக்கணிப்பு | நக்கீரன் |
| **159.** | 30.11.09 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை அருகுக சவேரியார்பட்டினத்தை சேர்ந்தவர் குழந்தைசாமி இவரது மகன் ஜார்ஜ்பெர்னாண்டோ(27) இவர் பாஸ்போர்ட் பெற மதுரை மண்டல அலுவலகத்தில் விண்ணபித்தார். அவர் சமர்பித்த ஆவணங்கள் போலி என சந்தேகித்த | காவல் நிலையை வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | போலீஸார்.தேவகோட்டை போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். 2 நாட்களாக காவல்நிலையத்தில் கையெழுத்திட்டு வந்தார். நேற்று கையெழுத்திடவந்த அவரிடம் சான்றிதழகளை எடுத்து வரும்படி போலீசார் கூறினார். போலீசார் விசாரணைக்கு பயந்து விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | | |
| **160.** | 30.11.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே கீரனூரைச் சேர்ந்தவர் முத்துஈஸ்வரி(21), இவரது கணவர் ராஜேந்திரன்(27), கூடுதல் வரதட்சணைக்கேட்டு கணவர் ராஜேந்திரன், உறவினர்கள் கஸ்தூரி, மூக்கையா, கண்ணன் சித்ரவதை செய்வதாக போலீசாரிடம் முத்து ஈஸ்வரி புகார். இது குறித்து மேலூர் போலீசார் கணவர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **161.** | 30.11.09 | **சென்னை மாவட்டம்:** அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. காலனியைச் சேர்ந்தவர் கிருத்திகா (பெயர் மாற்றப்பட்டுள்ளது.) இவர் சென்னை கல்லூரியில் பி.எஸ்.தசி. பட்டப்படிப்பு படித்துவந்தார். அதே பகுதியைச் சேர்ந்த விஜய் என்ற வாலிபரும் காதலித்து வந்தனர் இந்நிலையில் கிருத்திகா கார்த்தி என்ற என்ஜினீயரை இரண்டாவதாக காதலிக்க ஆரம்பித்தார். ஆத்திரம் அடைந்த விஜய் கிருத்திகாவை கத்தியால் குத்தியதால் தடுக்க வந்த கார்த்திக்கும் கத்திகுத்து விழுந்தது இருவரும் பலத்த காயம் அடைந்து சிகிச்சை பெற்ற வருகின்றனர். இது குறித்து புகாரின் பேரில் துணை கமிஷனர் மவுரியா விஜய்யை கைது செய்து விசாரித்து வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |